**O.S.No. 149/2021** வா.சா.**1 –** ராமசாமி **02.11.2023**

சாட்சி முன்னிலையாகி**,** சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**,** நீதிமன்ற அனுமதியுடன் முதல்விசாரணை தொடர்ச்சி **:-**

1ம் பிரதிவாதி என் பெயருக்கு ரூ. 30 இலட்சத்துக்கு எழுதிக்கொடுத்த காசோலை வா.சா.ஆ.22.

**1** மற்றும் **3**ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

16.08.2018 அன்று பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கி காசோலை கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு கரூரில் வைத்தும், சேலத்தில் வைத்தும் 1ம் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். நான் மலேசியாவிற்கு சென்றிருந்தபோதும் 1ம் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். எனக்கு கடவுச்சீட்டு உள்ளது. 2018ம் வருடம் ஜூலை மாதத்தில் 1ம் பிரதிவாதி கரூருக்கு வந்து என்னிடம் கடன் கேட்டார். மலேசியா செல்வதற்கு விசா வேண்டும். மலேசியா குடியுரிமை பெற்றவர்கள், இந்தியா வருவதற்கு விசா வேண்டும். மலேசியா குடியுரிமை பெற்றவர்கள் இந்தியாவிற்கு வரும்போது கடவுச்சீட்டில் பதிவு செய்ய வேண்டும். 1ம் பிரதிவாதி ஜூலை மாதம் இந்தியாவிற்கு வரவில்லை என்றும், கரூருக்கு வந்து என்னிடம் பணம் கேட்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த காலக்கட்டத்தில் 1ம் பிரதிவாதி மலேசியாவில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கடவுச்சீட்டை பார்த்தால் மேற்சொன்ன விவரம் தெரியும். காசோலை முறிவு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்தேன். அந்த அறிவிப்புக்கு 1ம் பிரதிவாதி மலேசியாவிலிருந்து அவரது வழக்கறிஞர் மூலமாக பதில் அறிவிப்பு கொடுத்தார். அந்த பதில் அறிவிப்பில் 1ம் பிரதிவாதி அவருடைய காசோலை தொலைந்து விட்டதாகவும், அது சம்மந்தமாக என் மீது புகார் கொடுக்கப்போவதாகவும் கூறியிருந்தார் என்றால் சரியல்ல. எனது தரப்பில் எனது பதிலுரையை நீதிமன்றத்தில் இன்றைய தினம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் சரிதான். எனது பதிலுரை பத்தி-19ல் 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பில் காசோலை தொலைந்தது சம்மந்தமாக புகார் கொடுப்பதாக கூறியுள்ளார். ஆனால் அவ்வாறு புகார் கொடுக்காமல் என் மீது வேறொரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, அவருடைய நான்கு காசோலைகள் காணாமல் போனது சம்மந்தமாக என் மீதும், என் மகன் சந்தோஷ்குமார் மீதும் மலேசியாவில் 08.03.2019 அன்று ஒரு புகார் கொடுத்தார்

என்றும், அதனால் நான் இரண்டு வருடங்கள் மலேசியாவிற்கு செல்லாமல் இருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய கணக்குகள் கணிணியில் பராமரிக்கப்படுவதில்லை. கையால் எழுதி பராமரிக்கிறேன். அதை ஏன் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை. நான் பராமரிக்கும் கணக்கை ஆடிட்டரிடம் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.21ல் உள்ள கணக்குகள் கணிணியில் தயார் செய்யப்பட்டவை. வா.சா.ஆ.21ல் உள்ள கணக்குகள் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பெயரை கணிணியில் புகுத்தி, அவர் கடன் வாங்கியது போன்று ஆவணங்கள் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. P.ஈஸ்வரன், த/பெ. பழனிச்சாமி, வெள்ளைகோவில், மூலனூர் என்ற முகவரியில் உள்ளவரை எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. மேற்படி ஈஸ்வரனை எனக்கு தெரியும் என்றும், அவர் மூலமாக காசோலை முறிவு சம்மந்தமாக STC. 61/2019 என்ற வழக்கை காங்கேயம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை எண். 101538 என்ற காசோலையை நான் எடுத்து வந்து, ஈஸ்வரன் என்பவரிடம் கொடுத்து வழக்கு தாக்கல் செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், ஈஸ்வரனும் மோசடியாக அவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கடவுச்சீட்டு புகைப்படத்தில் உள்ள நபர் 1ம் பிரதிவாதி. 1ம் பிரதிவாதி 20.11.2017க்கு பிறகு 14.08.2018தான் இந்தியாவிற்கு வந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கரூரில் வைத்தும், சேலத்தில் வைத்தும் என்னிடம் கடன் கேட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையெழுத்தை ஆய்வுக்காக கையெழுத்து நிபுணருக்கு அனுப்புவதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை. பிரதிவாதி மனு தாக்கல் செய்தால், அதற்கு எனக்கு ஆட்சேபனையில்லை. வா.சா.ஆ.22 காசோலையில் உள்ள "K.Ramasamy" என ஆங்கிலத்தில் எழுதியிருப்பதும், "ரூபாய் முப்பது இலட்சம்" என்ற தொகையை எழுத்தால் எழுதியதும் யார் என்றால் அதை நான் எழுதினேன். காசோலை தேதியை நான்தான் எழுதினேன் என்றால் இல்லை. அவர்தான் எழுதினார். வா.சா.ஆ.22 காசோலையில் உள்ள தேதி மற்றும் கையெழுத்து 1ம் பிரதிவாதியுடையதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என் பெயருக்கு காசோலை கொடுக்கவில்லை என்றும், அதன்காரணமாகத்தான் காசோலையில் என் பெயரையும்,...

தொகையையும் எழுதவில்லை என்றும், நானாகவே காசோலையில் உள்ள தேதி மற்றும் கையெழுத்தை மோசடியாக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையை முழுமையாக பூர்த்தி செய்து கொடுப்பதுதான் வழக்கம் என்றால் சரியல்ல. 16.08.2018 அன்று என் மகன் சந்தோஷ்குமாரிடம் ரூ.25 இலட்சம் 1ம் பிரதிவாதி கடன் வாங்கியுள்ளார் என 1ம் பிரதிவாதிக்கு எதிராக காசோலை மோசடி வழக்கும், பணத்தை வசூலிக்க கேட்டு உரிமையியல் வழக்கும் என் மகன் தாக்கல் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி, என்னிடமும், என் மகனிடமும் நான் சொன்னதுபோல் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், அந்த கடனிற்கு நான் சொன்னதுபோல் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 16.08.2018 தேதியில் 1ம் பிரதிவாதி கரூரில் இல்லை என்றும், அவர் அன்றைய தினம் அவருடைய சம்பந்தியின் 60வது வயது திருமணத்திற்காக திருக்கடையூரில் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

சாட்சி முன்னிலையாகி**,** சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**, 1**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதிக்கு எதிராக, வாதியும், அவரது மகன் சந்தோஷ்குமாரும் தாக்கல் செய்த காசோலை மோசடி வழக்குகளில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில், 1ம் பிரதிவாதி, வாதி வீட்டில் வைத்து கடன் வாங்கினார் என கூறியுள்ளேன். எத்தனை மணிக்கு கடன் வாங்கினார் என்று சொல்லவில்லை. வாதியின் வீடு அரவக்குறிச்சியில் உள்ளது. கடன் கொடுத்த அன்றுதான் முதன்முதலில் 1ம் பிரதிவாதியை பார்த்தேன். அதன்பிறகு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது பார்த்தேன். 1ம் பிரதிவாதி கூந்தலுடன் இருந்தாரா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. அவர் நல்ல உயரமாக சிவப்பாக இருந்தார். 1ம் பிரதிவாதி ஒரே நாளில் வாதியிடமும், அவர் மகனிடமும் கடன் வாங்கினார். முதலில் சந்தோஷ்குமாரிடம் கடன் வாங்கினார். சந்தோஷ்குமார் வீடு கரூர், பாரதி நகரில் உள்ளது. அங்கு வைத்தும் கடன் கொடுக்கும்போது நான் இருந்தேன். பொதுவாக கடன் வாங்கும்போது கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்து காசோலையும் கொடுப்பார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பின் தேதியிட்டு காசோலை வழங்கப்படும்போது, வட்டியுடன் சேர்த்து வழங்கப்படும் என்றால் அது எனக்கு தெரியாது. கடன் வாங்கிய ரூ.30 இலட்சம் தொகைக்கு 1ம் பிரதிவாதி காசோலை கொடுத்தார். அந்த தொகைக்கு வட்டி கொடுத்தாரா என்றால் வட்டி கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவர் கையிலிருந்து வட்டிக்காக வாதிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. வாதி வழக்கில் வட்டி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சந்தோஷ்குமார் வீட்டிற்கு நான் மதியம் சுமார் 12.30 – 12.45 மணிக்கு சென்றேன். பத்து நிமிடத்தில் 1ம் பிரதிவாதி அங்கு வந்தார். அவர் மட்டும்தான் காரில் வந்தார். அவர் கிரே கலர் இனோவா காரில் வந்தார். அந்த காரின் பதிவு எண் எனக்கு தெரியாது. டிரைவர் காரை ஓட்டி வந்தார். சந்தோஷ்குமார் வீட்டிலிருந்து அரவக்குறிச்சி 35 கி.மீ. தூரத்தில் உள்ளது. சந்தோஷ்குமார் வீட்டிலிருந்து நான் அரவக்குறிச்சிக்கு செல்கிறேன் என்று சொன்னேன். 1ம் பிரதிவாதியும், வாதி வீட்டிற்கு செல்கிறேன் என்று சொன்னார். நான் 1ம் பிரதிவாதியுடன் வாதி வீட்டிற்கு அவர் வந்த காரிலேயே சென்றேன். அரவக்குறிச்சியில் வாதி வீட்டில் வாதி மட்டும் இருந்தார். சந்தோஷ்குமார் எங்களுடன் வாதி வீட்டிற்கு வரவில்லை. வாதி வீட்டில் வைத்து, 1ம் பிரதிவாதி அவரது …….

பேக்கிலிருந்து ஒரு காசோலையை எடுத்து, எங்கள் முன்னிலையில் கையெழுத்திட்டு கொடுத்தார். அந்த காசோலையில் ஏற்கனவே பெயர், தொகை ஆகியவை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எங்கள் முன்னிலையில் 1 ம் பிரதிவாதி கையெழுத்து மட்டும் போட்டுக்கொடுத்தார். நான் சொல்வதுபோல் 1 ம் பிரதிவாதி வாதியிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், அந்த கடனுக்கு காசோலை எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், காசோலையில் உள்ள கையெழுத்து 1 ம் பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றும், நானும், வாதியும், வாதியின் மகனும் மோசடியாக 1 ம் பிரதிவாதியிடமிருந்து திருடிய காசோலையை தயார் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. அந்த தேதியில் 1 ம் பிரதிவாதி கரூரில் இல்லை என்றும், திருக்கடையூரில் அவரது சம்பந்தியின் 60 வயது திருமண விழாவில் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.